


# சென்னையில் மழை!

சென்னை, ஆக.11–

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் பெய்து வரும் மழையால் வெப்பம் தணிந்து காணப்படுகிறது.

சேப்பாக்கம், எழும்பூர், கிண்டி, ஆலந்தூர், மதுரவாயல், வானகரம். திருவேற்காடு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. புறநகர்ப் பகுதிகளான ஆவடி, அம்பத்தூர், திருமுல்லைவாயல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், சேலம், நாமக்கல், தருமபுரி, திருவண்ணாமலை, திருப்பத்தூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் கிரிக்கெட் உலகக்கோப்பை:

# டிக்கெட் விற்பனை தேதிகள் அறிவிப்பு!

சென்னை,ஆக.11–

ஒரு நாள் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடருக்கான டிக்கெட் விற்பனை நடைபெறும் தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை, டெல்லி, புனேவில் நடைபெறும் இந்தியா பங்கேற்கும் போட்டிகளுக்கான டிக்கெட் விற்பனை ஆக.31ல் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குவஹாத்தி, திருவனந்தபுரத்தில் நடைபெறும் இந்திய அணி போட்டிகளுக்கான டிக்கெட் ஆக.30ல் விற்பனை செய்யப்படுகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (10.08.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் குறித்தும், அங்கு நடைபெற்று வரும் சாலைப் பணிகள் குறித்தும் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா , சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, போக்குவரத்து ஆணையர் அ.சண்முகசுந்தரம், தலைமை வனப்பாதுகாவலர் திருமதி. கீதாஞ்சலி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக

# அவசர பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக அவசர பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகிற 14.8.2023 திங்கட்கிழமை மாலை 04.00 மணியளவில் திருப்போரூர் வடக்கு ஒன்றியம், மாம்பாக்கத்தில் மேடவாக்கம் சாலையில் அமைந்துள்ள விக்னேஷ் மகால் திருமண மண்டபத்தில் மாவட்டகழகஅவைத்தலைவர்த.துரைசாமிதலைமையிலும், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள், இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட கழக பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1. வருகிற 21.8.2023 அன்று நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை துவங்கி வைக்க முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் வருகை.
2. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.
3. கழக வளர்ச்சி.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்,**
செயலாளர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.




